ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஊனில் வாழ் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஊனில் வாழ் ॥

அடியார் குழாத்தைக் கூடும் ஆசையுற்று உரைத்தல்

‡ஊனில் வாழ் உயிரே⋆ நல்லை போ உன்னைப் பெற்று⋆
வான் உளார் பெருமான்⋆ மதுசூதன் என் அம்மான்⋆
தானும் யானும் எல்லாம்⋆ தன்னுள்ளே கலந்தொழிந்தோம்⋆
தேனும் பாலும் நெய்யும்⋆ கன்னலும் அமுதும் ஒத்தே (1)

ஒத்தார் மிக்காரை⋆ இலையாய மா மாயா⋆
ஒத்தாய்⋆ எப்பொருட்கும் உயிராய்⋆ என்னைப் பெற்ற
அத்தாயாய் தந்தையாய்⋆ அறியாதன அறிவித்த⋆
அத்தா நீ செய்தன⋆ அடியேன் அறியேனே (2)

அறியாக் காலத்துள்ளே⋆ அடிமைக்கண் அன்பு செய்வித்து⋆
அறியா மா மாயத்து⋆ அடியேனை வைத்தாயால்⋆
அறியாமைக் குறளாய்⋆ நிலம் மாவலி மூவடி என்று⋆
அறியாமை வஞ்சித்தாய்⋆ எனதாவியுள் கலந்தே (3)

எனதாவியுள் கலந்த⋆ பெரு நல் உதவிக் கைம்மாறு⋆
எனதாவி தந்தொழிந்தேன்⋆ இனி மீள்வதென்பதுண்டே⋆
எனதாவி ஆவியும் நீ⋆ பொழில் ஏழும் உண்ட எந்தாய்⋆
எனதாவியார் யான் ஆர்⋆ தந்த நீ கொண்டாக்கினையே (4)

இனியார் ஞானங்களால்⋆ எடுக்கல் எழாத எந்தாய்⋆
கனிவார் வீட்டின்பமே⋆ என் கடல் படா அமுதே⋆
தனியேன் வாழ் முதலே⋆ பொழில் ஏழும் ஏனம் ஒன்றாய்⋆
நுனியார் கோட்டில் வைத்தாய்⋆ உன பாதம் சேர்ந்தேனே (5)

சேர்ந்தார் தீவினைகட்கு⋆ அரு நஞ்சைத் திண் மதியை⋆
தீர்ந்தார் தம் மனத்துப்⋆ பிரியாதவர் உயிரை⋆
சோர்ந்தே போகல் கொடாச் சுடரை⋆ அரக்கியை மூ-
க்கீர்ந்தாயை⋆ அடியேன் அடைந்தேன்⋆ முதல் முன்னமே (6)

www.prapatti.com

முன் நல் யாழ் பயில் நூல்⋆ நரம்பின் முதிர் சுவையே⋆
பன்னலார் பயிலும்⋆ பரனே பவித்திரனே⋆
கன்னலே அமுதே⋆ கார் முகிலே என் கண்ணா⋆
நின் அலால் இலேன் காண்⋆ என்னை நீ குறிக்கொள்ளே (7)

குறிக்கொள் ஞானங்களால்⋆ எனை ஊழி செய் தவமும்⋆
கிறிக்கொண்டிப் பிறப்பே⋆ சில நாளில் எய்தினன் யான்⋆
உறிக்கொண்ட வெண்ணெய் பால்⋆ ஒளித்துண்ணும் அம்மான் பின்⋆
நெறிக்கொண்ட நெஞ்சனாய்ப்⋆ பிறவித் துயர் கடிந்தே (8)

கடி வார் தண்ணந் துழாய்⋆ கண்ணன் விண்ணவர் பெருமான்⋆
படி வானம் இறந்த⋆ பரமன் பவித்திரன் சீர்⋆
செடியார் நோய்கள் கெடப்⋆ படிந்து குடைந்தாடி⋆
அடியேன் வாய்மடுத்துப்⋆ பருகிக் களித்தேனே (9)

களிப்பும் கவர்வும் அற்றுப்⋆ பிறப்புப் பிணி மூப்பிறப்பற்று⋆
ஒளிக் கொண்ட சோதியுமாய்⋆ உடன் கூடுவதென்று கொலோ⋆
துளிக்கின்ற வான் இந்நிலம்⋆ சுடர் ஆழி சங்கேந்தி⋆
அளிக்கின்ற மாயப் பிரான்⋆ அடியார்கள் குழாங்களையே (10)

‡குழாங்கொள் பேர் அரக்கன்⋆ குலம் வீய முனிந்தவனை⋆
குழாங்கொள் தென் குருகூர்ச்⋆ சடகோபன் தெரிந்துரைத்த⋆
குழாங்கொள் ஆயிரத்துள்⋆ இவை பத்தும் உடன் பாடி⋆
குழாங்களாய் அடியீர் உடன்⋆ கூடி நின்றாடுமினே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com